# திறவுகோல்

**2051 தை**
**மாத இதழ்**



இனிய
**பொங்கல்,**
மற்றும்
**தமிழ் புத்தாண்டு**
தின நல்வாழ்த்துகள்

வெளியீடு
**மன்னையின் மைந்தர்கள்**
**அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.


குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

மன்னார்குடி **ரா. ராஜேஷ்**

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 19)



# செண்பக வனம்

கடந்த ஓரிரு நாட்களாக ஆர்ப்பாட்டமும் அமர்க்களமாய் இருந்த முச்சந்தி சத்திரத்தின் சமீபத்திய இடங்கள் இப்போது மயான அமைதியாக இருந்தது.

முன்னும் பின்னும் இடமும் வலமும் என நான்கு புறமும் சுமார் 700-க்கும் மேற்பட்ட எதிரி வீரர்கள் சூழ்ந்திருக்க அதன் நடுவே தோராயமாக 100 குதிரை வீரர்களும் மற்றும் நான்கு குதிரைகள் பூட்டிய சொகுசு ரதமும் நின்றுக் கொண்டிருந்தது.

ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று பயந்து கொண்டிருந்த சத்திரத்தின் ஊழியர்கள் சத்தம் இல்லாமல் கதவை சாத்திக் கொண்டு வந்தனர்.

ராஜபாட்டையில் குறுக்கே வெட்டி சாய்க்கப்பட்டு இருந்த மரத்தின் அருகில் பத்துப்பதினைந்து குதிரைகள் வந்து நிற்க, அதிலிருந்து ஒருவன் மட்டும் முன்னால் வந்தான். அவனது உடலும் எதையோ சாதித்து குடித்த முகபாவனையும், அவன் தான் அந்தக் கூட்டத்தின் தலைவன் என்று சொல்லாமல் சொல்லியது.

‘‘சோழர் குல திலகமே வருக வருக ..
உங்கள் பொன்னான உயிரை தருக தருக..‘‘
என்று எதுகை மோனையில் கத்திவிட்டு இடி இடி என தனக்குத் தானே சிரித்துக் கொண்டார். இப்படி அவனின் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தபோதே ரதத்தையும் குதிரை வீரர்களையும் வெகு சமீபத்தில் நெருங்கி வந்தார்கள் எதிரி வீரர்கள்.

அதுவரை ரதத்தில் உட்கார்ந்திருந்த தேரோட்டி தன் இருக்கையில் மீது எழுந்து நின்று ஏளனமாய் சிரித்தார் அவரோடு வந்திருந்த குதிரை வீரர்களும் சேர்ந்து சிரிக்க . இவர்களின் சிரிப்பு எதிரிப்படை தலைவனுக்கு எரிச்சலூட்டியது.
‘‘சாவு பயத்தால் சிரிக்கிறாய், பயப்படாதே. உன்னை மட்டும் வலிக்காமல் கொல்ல சொல்கிறேன் சரியா‘‘ என்று சொல்லிக் கொண்டு மீண்டும் இடி இடி என்று சிரித்தான்

எதிரி கூட்டத் தலைவன்.

அதுவரை தன் முகத்தை மறைத்தவாறு கட்டியிருந்த தனது முண்டாசை அவிழ்த்த தேரோட்டி . ''சாவு பயமா! எனக்கா?'' என்றார்.

அதுவரை சிரித்துக் கொண்டிருந்த எதிரி கூட்டத்து தலைவன் கண்கள் அகல விரிய அவன் தன்னையும் அறியாமல் ''ஐயோ பாம்பணி கூற்றத்து சசிதரரா ! இவர் எப்படி இங்கே வந்தார் ? இன்று யார் முகத்தில் முழித்தேன், எமனையே நேரில் காண்கிறேனே'' என்று தன்னைத்தானே நொந்து கொண்டவன் எதையும் வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் சமாளித்துக்கொண்டு.

''அடடே யார், வந்திருப்பது பாம்பணி கூற்றத்து பல்லவராயர் சசிதரனுக்கு வந்தனம் வந்தனம்
நீங்கள் சுற்றி முற்றி பார்த்தீர்களா ?
சுமார் 800 க்கும் மேற்பட்ட வீரர்கள் உங்களை சூழ்ந்து இருக்கிறோம். நீங்கள் மரியாதையாக அந்த ரதத்தில் உள்ளவர்களை எங்களிடம் ஒப்படைத்து விட்டு நீங்களும் சரணடைந்து விடுங்கள். இல்லையேல் அடுத்து என்ன நடக்கும் என்று எனக்கு தெரியாது ''என்றான்.

''என்னைப் பற்றி இவ்வளவு நன்றாக தெரிந்திருக்கும் குள்ளநரிக்கூட்டம் தலைவரே'' நீங்கள் யார்? உங்களை இந்த செயலுக்கு தூண்டியவர் யார்? என்று தெரிந்து கொண்டால் உங்கள் பிணத்தை உரிய இடம் கொடுத்து விடலாம். அதனால் நான் மூன்று எண்ணுவதற்குள் உங்கள் முழு விவரத்தையும் சொல்லிவிடுங்கள் '' என்று கூறிய சசிதரன் எதிரி கூட்டத்தின் தலைவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவரின் கைகள் ஏதோ ஒரு செய்கையை செய்தது..

''சரீர்'' என்று காற்றைக் கிழித்துக் கொண்டு ஏதோ ஒன்று செல்கிற சத்தம் கேட்க ''அம்மா'' என்று அலறியவாறே யாரோ ஒருவர் கையில் வில்லும் அம்பும் பிடித்தவாறே மரத்திலிருந்து கீழே விழுந்தான். அது தான் தாமதம் ''சர்'' ''புர்'' என்று சீறிப்பாய்ந்தன அம்புகள் ''அம்மா'' ''ஐயோ'' என்று யார் யாரோ அலறி கீழே விழுந்தார்கள்.

மரக்கிளைகள் ''மடமட''வென்று முறியும் சத்தம் எங்கும் கேட்டது. இந்த செயல்கள் நடந்து கொண்டிருக்கும் அதே தருணத்தில் சாலையின் இருபுறமும் இருந்த காடுகளிலிருந்து மேலும் அம்பும் வேல்களும் சீறிப்பாய்ந்தன. எங்கிருந்து அம்புகள் வருகின்றன, எங்கிருந்து வேல்கள் வருகின்றன என்று எந்த ஒரு பிடிமானம் இல்லாமல் அங்கு தாக்க வந்திருந்த எதிரி கூட்டங்கள் சிதறடித்து காட்டுக்குள் புகுந்து தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள தலைதெறிக்க ஓடினார்கள்.

அப்படி ஓடியவர்கள் பலர் பல இடங்களில் வைக்கப்பட்டிருந்த கண்ணிகளில் அடிபட்டு இறந்தனர். முரட்டுத்தனமான பெரும் கண்ணிகளில் மாட்டிக்கொண்ட பல பேரின் கைகால்கள் பிய்த்துக் கொண்டு அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன. இப்படி ஒரு கோர சாவினை அவர்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். பயந்து ஓடியவர்களைத் தவிர சில வீரர்கள் திறமையாக சண்டையிட்டார்கள் அவர்களின் இலக்கு அந்த ரதத்தை நோக்கியே இருந்தது. அதுவரை வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த சசிதரன் ரதத்தில் இருந்து கீழே இறங்கிய அதன் கதவைத் திறந்தார்....

இனி என்ன நடந்தது என்று முழு நீள புதினத்தில் காண்போம்.....

இதுவரை இந்த தொடரை படித்து வந்த அனைத்து வாசகர்களுக்கும் எங்களின் நன்றியை உரித்தாக்குகிறோம்.



ஓவியம்
திருநிறைச்செல்வன்

# 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் பிறந்த தேசப்பிதாவின் 150வது பிறந்த நாளை நாடே கொண்டாடும் இந்நேரத்தில் அவருக்கு ஒரு கடிதம்

பாபு நீங்கள் அழியாதவர்!

அன்புள்ள மகாத்மா, எங்களின் பாசமிகு பாபுஜி!

வணக்கம். நீங்கள் பிறந்து 150 வருடங்கள் ஆகிவிட்டதா? உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் தேசத்தந்தையே, தங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்! அமெரிக்கா பத்திரிக்கையாளரும் வரலாற்று ஆய்வாளருமான லூயிஸ் பிஸ்சரின் கூற்றை இங்கு நினைவு கூற விரும்புகிறேன். If Gandhi would have been born some two thousand years ago, his youth may be in myths, his life may be in golden words and he has been worshipped as a God காந்திஜி நீங்கள் ஒரு மகான், நீங்கள் மட்டும் குறைந்தது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்திருந்தால், அது அவதாரம் ஆகியிருக்கும், குழந்தை பருவத்து நிகழ்வுகள் அதிசயங்களாலும், இளமை காலத்து அனுபவங்கள் கொள்கைகளாலும், முதுமை காலத்து பிரசங்கமும் வாழ்வும் தெய்வ வாக்குகளாகவும், நிரம்பி நீங்கள் இந்நேரம் கடவுளாக வழிபட்டுக் கொண்டு இருக்கக் கூடும். உலகின் மிகப்பெரிய மதமாகியிருக்கும் காந்தியம்.

சத்தியமாய் உங்கள் வாழ்வு சோதனைகளால் நிரம்பியது தான். எல்லாம் ஆன்மீக தற்சோதனைகள், வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் ஆன்ம பரிசோதனைகள், அதனால்தான் உங்கள் சுயசரிதையை சத்திய சோதனை என்றீரோ? உங்களது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வும் கலிகாலத்தில் சாத்தியமானது தானா என்ற ஆச்சரியத்தை தருகின்றன. உங்களின் பிறப்பும் புத்தரையும், இயேசுவையும், நபிகளை போல் அரிதான அவதாரம்தான். இந்தியர்களுக்கு உனது அருமை என்று தெரியும்? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் உங்களது வாழ்வு ஆராதிக்க வேண்டிய ஆச்சரியங்களால் ஆனது. உலகில் சுதந்திர போராட்டம் வெற்றி பெற்ற நாடுகளில் எல்லாம் சுதந்திர போராட்டத்திற்கு தலைமை வகித்தவரே நாட்டின் அரசியல் தலைவராகவும் வந்தது வரலாறு. ஆனால் நீங்களோ அரசியல் தலைமையைவிட நாட்டின் அத்தனை கோடி மக்களின் மனங்களிலும் அதிகாரம் மிக்கவராய் திகழ்கிறீர்கள்.

பாபுஜி நீங்கள் அழியாதவர்! நாட்டில் இன்று நடக்கும் அரசியல் நிகழ்வுகள் அத்தனையும் உங்களை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. எதிர்கட்சித் தலைவா்கள் ராகுல் காந்தி, சோனியா காந்தி உள்ளிட்டோருக்கு எஸ்.பி.ஜியின் சிறப்பு பாதுகாப்புப் படை பாதுகாப்பு விலக்கி கொள்ளப்பட்ட போது உங்களைத் தான் நினைத்துக் கொண்டேன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 78 வயது வரை மிகவும் பாதுகாப்பாக இருந்த உங்களை

சுதந்திர இந்தியாவில் வெறும் 6 மாதங்கள் கூட எங்களால் பாதுகாக்க முடியவில்லை. எங்கே எங்கள் சிறப்பு பாதுகாப்பு படையும், Z++ பாதுகாப்பும், கருப்பு பூனைப் படைகளும்? மாநிலத்து அமைச்சரையும், மத்திய அமைச்சர்களையும், இன்னபிற வி.வி.ஐபிக்களையும் பின் தொடரும் சைரன் வாகனங்களைப் பார்க்கும் போது நவகாளி யாத்திரையின் போது மதக் கலவரங்களால் படுகொலை செய்யப்பட்டோரின் உடல்களுக்கு நடுவே, நீங்கள் யாரோடு நின்று கொண்டு, என்ன பிரார்த்தனை செய்திருப்பீர்கள் என எண்ணாமல் இருக்க முடியவில்லை.

அந்தந்த நாட்டின் உடையில் சென்றால் தான் முதலீடுகளை ஈர்க்க முடியும் என்று சொல்லி நம் தலைவர்கள் பிரிட்டிஷ்காரர்கள் போல் வெளிநாடு பயணம் மேற்கொள்கிறார்கள். ஐந்தாம் ஜார்ஜ் மன்னரை பக்கிங்காம் அரண்மனையில் தாங்கள் சந்தித்த போது Mr. Gandhi do you think that you are properly dressed to meet the king என்ற கேள்வியை தாங்கள் எதிர்கொண்டது எவ்விதம் பாபுஜி?

தமிழகத்தில் டாஸ்மாக் விற்பனை கடந்த தீபாவளி விடுமுறைக் காலங்களில் 455 கோடி! இலக்கு நிர்ணயித்ததோ 385 கோடி தான். இந்த சேதி உங்களுக்கு எப்பொழுது வந்தடைந்து எம் தேசத் தந்தையே. தங்களின் மதுவிலக்கு கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு எத்தனை தென்னை மரங்களை பெரியோர் எண்ணாமல் வெட்டி வீழ்த்தினார் என எண்ணாமல் இருக்க முடியவில்லை. கதரும், கைவினைப் பொருட்களும், குடிசை தொழிலாக தயாரிக்கப்படும் பொருட்களும் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் காதிபவனுக்கு விற்பனை இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படுவதில்லை.

நாட்டின் வர்த்தக தலைநகரான மும்பையை உள்ளடக்கிய மகாராஷ்டியத்தில் இரவு 11 மணிக்கு ஆளுநர் பகத்சிங் கோசியாரியைச் சந்தித்து காலை 8 மணிக்கு முதலமைச்சராய் பதவி ஏற்கிறார். தேவேந்திர பட்னாவில், நள்ளிரவு 2 மணிக்கு பரிந்துரை செய்தபின் விடியற்காலை 6.35 மணிக்கு குடியரசுத் தலைவர் ஆட்சி விளக்கிக் கொள்ளப்பட்ட செய்தி தங்களை வந்தடைந்தது எப்போது? ஒவ்வொரு முறை நம்பிக்கை வாக்கெடுப்பிற்கும் முன் சொகுசு பஸ்களில் ஏற்றி பாதுகாப்பாக சொகுசு விடுதிகளில் தங்க வைக்கப்படும் எம்.எல்.ஏக்கள் மற்றும் கூவத்தூர் சொகுசு விடுதியில் தங்கியிருந்த மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுதல்கள் என்னவாய் இருந்திருக்கும்? சமர்மதி ஆஸ்ரமம் பார்த்ததில்லை ஆனால் படித்திருக்கிறேன். ராமனுக்கு பெரிய சிலை ஏதும் நீங்கள் ஆசிரமத்தில் எழுப்பியிருக்கலாம். கிந்துக்களும், முஸ்லிம்களும் உங்கள் பெயராலேயே ஒற்றுமையாய் வாழ்கிறோம். யமுனை நதிக்கரையில் ஒற்றுமையின் அடையாளமாய் வீற்றிருக்கும் வல்லபாய் படேலின் சிலை காந்திய தேசத்தின் புது அடையாளம். குமரி முனையில் 133 அடி வரை உயர்ந்து நிற்கும் வள்ளுவர் வகுத்த வள்ளவமும், நீங்கள் சொன்ன காந்தியமும் சொல்லும் சேதி ஒன்று தான்.. வாய்மை எனப்படுவது யாதெனில், வள்ளுவமும், காந்தியமும் இந்தியாவின் அடையாளங்களாக உலகம் ஒப்புக் கொள்கிறது. ஆனால் இந்தியர்கள் இன்னும் முழுமையாக ஒப்புக் கொள்ளவில்லை.

பத்து ரூபாய் மட்டும் வைத்திருக்கும் பரம ஏழையின் மனங்களிலும், தடைசெய்யப்பட்ட 500 ஆயிரம் ரூபாய் நோட்டுகளிலும், செயற்கைக் கோள் கூட கண்டுபிடிக்க முடியாத

டேங்கா் லாரிகளில் பிடிப்பட்ட 2000 ரூபாய் நோட்டுகளிலும் நீங்கள் பாதுகாப்பாய் வாழ்கிறீா்கள் பாபுஜி.

கத்தியின்றி இரத்தமின்றி நீங்கள் நடத்திய யுத்தமும் அஹிம்சை எனும் ஆயுதமும் உலகம் வியக்கும் ஆச்சரியங்கள், ஆயுதங்களாலும், அணுகுண்டுகளாலும், பீரங்கிகளாலும், வான்படை, கடற்படை, ஆயுதம் ஏந்திய ராணுவம் இவற்றலா் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலங்களில் உங்களுக்கு மட்டும் நிராயுதபாணியாய் அஹிம்சை ஆயுதம் ஏந்த எப்படி ஒரு தைரியம் வந்தது பாபு, உச்சநீதி மன்றத்தில் அயோத்தி தீர்ப்பு வந்த நாள் முழுமைக்கும் உங்களையே நினைத்திருந்தேன். நீங்கள் சொன்ன ராம ராஜ்ஜியம் இது தானா? நாட்டிலுள்ள எல்லோரும் இன்புற்று இருக்கும் நிலையைத்தான் ராம ராஜ்ஜியம் என நினைத்திருந்தோம். ராம ஜென்ம பூமியில் ராமர் கோவில் கட்டுவதை மட்டும்தான் இப்போது ராம ராஜ்ஜியம் என்கிறார்கள்.

நீ களையெடுக்க சொன்னதையெல்லாம்
மக்கள் மனங்களில் தலையெடுத்துக் கொண்டு
நீ கடைபிடிக்க சொன்னதையெல்லாம்
மக்கள் மனங்களில் கறைபிடித்துக் கொண்டு
மறந்துமிங்கே மறுபிறவி எடுத்துவிடாதே
மகாத்மா நீ!
கோட்சேக்களின் கூடாரமாய் இன்றைய பாரதம்!

எனும் கவிதையை நினைத்து சிரிப்பதா அழுவதா என தெரியவில்லை.

எங்களின் தேசப் பிதாவே ! ஆஞ்சநேயரிடம் உனது ராம பக்தியில் எனக்கு கொஞ்சம் தா என வேண்டுவது போல உங்களிடம் வேண்டி நிற்கிறோம். உங்களின் தேச பக்தியையும், கடவுள் பக்தியையும், நாட்டு மக்களின் மீதுள்ள அளப்பரிய காதலையும், விலை மதிப்பில்லா தனிமனித ஒழுக்கத்தையும், துன்பப்படும் பசுவை கொன்று விடுங்கள் என்ற ஜீவகாருண்யத்தையும், கோட்சேவை மன்னித்து விடுங்கள் எனும் மனதையும், எல்லோரும் வணங்கும் எளிமையையும் எங்களுக்கு தாருங்கள்!

எங்களை வழிநடத்துங்கள் மகாத்மா. உங்களோடு சேர்ந்து இந்திய தேசமும் வழிபாட்டுக்கு உரியதாய் மாறட்டும்.

பாபு, நீங்கள் அழியாதவர்!
வாழ்க நீ எம்மான்! ஹேராம்!

என்றும் காந்தியையும், காந்தியத்தையும் நேசிக்கும் அன்பன்

ச. அன்பரசு,
முதுகலை ஆசிரியர், மன்னார்குடி.
தொடர்பு இலக்கங்கள் : 978709302 / 7010217979
Email: anbuhereforu@gmail.com

# காற்றில் கரையும் கனவுகள்

இரவைக் களிம்பாய் பூசி
பகல்களை வலியுடன் கடக்கிறேன்,
விடியலில் எதிர்ப்படும்
காயங்கள் மொத்தமும்
கண்ணீரை நதியெனப் பொங்கிட
கதறலும் கம்பலையுமாய்
நிறைந்து பிசுபிசுக்கின்றன,
தெருவெங்கும் சாலையெங்கும்
கைவிடப்பட்ட கோரிக்கைகள்....
மிளகாய் அரைத்த தலைகளில்
கேழ்வரகு கோதுமை கடலைமாவு என
யாவும் அரைக்கையில்
முத்திரையிடப்பட்ட இளித்தவாயராய்
மௌனித்து வாழ்தல்
தலைமுறை சாபமாகி
காற்றில் கரையும் கனவுகள் மொத்தம்

கயமை சிந்தும் பருக்கைகளுக்காய்
அடிவருடி ஜீவிக்கும்
தன்மானம் விற்ற தேசத்தில்
நீதியெங்கே? நேர்மையெங்கே?
ஏழ்மையெய்யும் வெற்றுக் கூச்சல்
எங்கே ?

பாட்டியை ஏமாற்றும் காக்கைகளும்
காக்கையை வஞ்சிக்கும் நரிகளும்
நரிகளை கவர்ந்திடும் ஓநாய்களும்
ஓநாய்களை உற்பத்தியாக்கும்
வெறிகொண்ட புலிகளும்
நிறைந்திருக்கும் பெருங்காட்டை
எந்த மேய்ப்பரைக்கொண்டு மீட்க?

வாய்த்ததைப் பெற்றுக்கொண்டும்
வருத்தத்தைத் தாங்கிக்கொண்டும்
வருவதை ஏற்றுக்கொண்டும்
வாழப்பழகிய நமக்குச்
சூடென்ன? சொரணையென்ன?
சுண்ணாம்புதான் என்ன?



பொன். தெய்வா
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.





பிரியா சுரேஷ்

# டெங்கு காய்ச்சலில் இருந்து எவ்வாறு நம்மை பாதுகாத்துக் கொள்வது?

டெங்குக் காய்ச்சல் மட்டுமல்ல; பறவைக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல், சிக்கன்குனியா..என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் எந்தக் காய்ச்சலாக இருந்தாலும் அவற்றிலிருந்து நம்மை எளிதாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

காய்ச்சல் என்பது நோய் அல்ல. நம் உடலில் தேவையற்ற கழிவுகளை அல்லது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் வைரஸ் கிருமிகளை வெளியேற்ற உடலின் எதிர்ப்புசக்தி செய்யும் பாதுகாப்பு ஏற்பாடு தான் காய்ச்சல். நாம் காய்ச்சலைப் பார்த்து பயப்பட வேண்டியதில்லை. அது ஏற்பட காரணமான கழிவுகள் நம் உடலில் தேங்குவதை தவிர்ப்பதுதான் முக்கியமானது.

டெங்கு காய்ச்சலுக்கு காரணமாக சொல்லப்படும் கிருமிக்கு எதிராக, நம் உடலைக் காப்பதற்காக இன்டெர்பெரோன் என்ற புரதத்தை நம் எதிர்ப்புசக்தி சுரக்கிறது. இந்த சுரப்பை ஏற்படுத்தவும், கழிவுத் தேக்க பாதிப்பைக் கட்டுப்படுத்தவும் தான் நம் உடலில் டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது.

ஆக, காய்ச்சல் என்பது பீதியடைய வேண்டிய, பயப்படக்கூடிய விஷயம் இல்லை.

கிருமியால் பரவுவதாகச் சொல்லப்படும் எல்லாவிதமான நோய்களும் எல்லா மனிதர்களையும் பாதிப்பதில்லை. ஆட்கொல்லி நோயாகக் கூறப்படும் எய்ட்ஸ் வைரஸ் கூட எல்லா நபர்களையும் பாதித்து விட முடியாது என்று மருத்துவ அறிவியல் கூறுகிறது. உடலில் அதிக கழிவுகளோடும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவும் உள்ள நபர்களிடமே வைரஸ் கிருமிகள் செயல்பட துணியும். எதிர்ப்பு சக்தி வலிமையாகவும், முழு ஆரோக்கியத்தோடும் இருக்கிற நபர்களை எந்த வைரஸ் நோயும் தாக்குவதில்லை என்பது அறிவியல் உண்மை.

அது போலவே டெங்கு என்று சொல்லப்படும் காய்ச்சலும் எல்லா நபர்களுக்கும் வருவதில்லை. எனவே முதலில் டெங்கு பரவி மனித குலத்தை அழித்துவிடும் என்ற பயத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் சிக்க வேண்டிய அவசியமில்லை. உளவியல் ரீதியாக டெங்கு காய்ச்சலிற்குக் காரணமாகக் கூறப்படும் வைரஸ் பரவுவதை விட, அது பற்றிய பயம் பரவுவது ஆபத்தானது. மனதில் ஏற்படும் மாறுபாடுகளும், பயமும் உடல்நிலையையும், அதன் ஆரோக்கியத்தையும் சீர்குலைக்கும்.

கி.பி.265 இல் டெங்கு என்று கூறப்படும் இதே அறிகுறிகளுடைய காய்ச்சல் சீனாவிலும், 1779 களில் ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து வந்துள்ளது.1789 இல் இந்த அறிகுறிகளுடைய காய்ச்சலுக்கு அமெரிக்காவில் டெங்கு என்று பெயரிடப்பட்டது.

காலம் காலமாக உலகம் முழுக்க உள்ள சாதாரணமான காய்ச்சல்தான் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமானது.

சிக்கன்குனியா, மலேரியா, டெங்கு என பல நோய்களுக்குக் காரணமாகக் கூறப்படும் ஏடிஸ் வகை கொசுக்களை அழிப்பதற்கு என்ன விதமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும்? இருநூறு வருடங்களுக்கும் மேலாக உள்ள மலேரியா, டெங்கு என்று பெயரிடப்பட்ட காய்ச்சல்களும், அதை பரப்புவதாக கூறப்படும் கொசுக்களும் இருக்கின்றன. இந்த இருநூறு வருடங்களில் உலகநாடுகள், உலக சுகாதார நிறுவனம் என அனைவரும் கொசுக்களை ஒழிக்க வருடம் தோறும் பட்ஜெட்களைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இருநூறு வருட கொசு ஒழிப்புத் திட்டங்களில் கொசு ஒழிந்திருக்கிறதா? அல்லது கூடுதாலாகி இருக்கிறதா? என்பதை நீங்களே யூகித்து கொள்ளுங்கள். உண்மையில் கொசுவால்தான் டெங்கு, மலேரியா,சிக்கன்குனியா உருவாகிறது என்பதில் துளியும் உண்மை இல்லை.

காய்ச்சல் வந்த நபருக்கு எந்த விதமான உதவிகள் செய்யலாம்?

முதலில் காய்ச்சல் வருவதைக் கண்டு பயப்படத்தேவையில்லை. ஏனென்றால் எல்லா காய்ச்சல்களுமே உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களுக்கு எதிராக நம் எதிர்ப்பு சக்தி ஏற்படுத்தும் பாதுகாப்பு ஏற்பாடுதான்.

காய்ச்சல் ஏற்பட்ட நபருக்கு செரிமான சக்தி குறைந்து போயிருக்கும்.

ஏனென்றால் உடலின் முழு சக்தியும் திரட்டப்பட்டு நோயெதிர்ப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும். அதனால் பசி இருக்காது. காய்ச்சல் முழுமையாக குறையும் வரை எந்த உணவையும் கட்டாயப்படுத்தி கொடுக்கக்கூடாது.

தேவையான போது தண்ணீர் கொடுக்கலாம். தண்ணீர் அருந்தும் போது குமட்டல், வாந்தி இருந்தால் வாயை நனைக்கும் அளவு தண்ணீர் கொடுத்தால் போதும்.

உதடுகள் வறண்டு காணப்படும் போது தண்ணீரால் உதடுகளை நனைத்துவிடலாம்.

வெப்பம் அதிகரித்துக் காணப்படும் போது அடி வயிற்றிலும், நெற்றியிலும் ஈரத்துணியை இடலாம்.

முழு ஓய்வு அவசியம்.

தாகம் முழுமையாக ஏற்பட்ட பின்பு மெதுவாக பசியுணர்வு தெரிய ஆரம்பிக்கும். அதுவரை உணவையோ, காபி,டீ போன்றவைகளையோ தரக்கூடாது.

பசி ஏற்பட்ட பின்பு நீர்த்த உணவுகளில் துவங்கி, அடுத்தடுத்த வேலைகளில்

படிப்படியாக திட உணவுகளுக்கு வரலாம்.

இம்முறையை குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் பின்பற்றலாம். ஒவ்வொரு முறையும் காய்ச்சல் ஏற்படும் போது இவற்றைக் கடைப்பிடித்தால் ஆரோக்கியம் நிலையானதாக மாறும். நோய் என்ற பயத்திற்கே இடமில்லை.

எல்லா வகை பீதிகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும் எதிர்ப்பு சக்தியை சரியாக வைத்துக் கொள்வது எப்படி?

பசியை உணர்ந்து, பசி ஏற்படும் போதுதான் சாப்பிடவேண்டும். பசி இல்லாத போது நேரத்தைப் பார்த்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

பசிக்கிற அளவிற்குத் தகுந்தவாறு உண்ணுகிற உணவின் அளவை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரே மாதிரியான பசி எப்போதும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

சாப்பிடும் போது உணவில் மட்டுமே முழு கவனம் இருக்க வேண்டும். தொலைக்காட்சியை பார்க்கவே, கதை பேசவோ கூடாது.

உதட்டை மூடி நன்றாக மென்று அரைத்து உமிழ்நீர் கலந்து சாப்பிட்ட பின்பே அடுத்த வாய் உணவை தொடங்க வேண்டும்.

உணவுகிடையில் அதிக நீர் அருந்த கூடாது.

தூக்கம் என்பது அவசியமானது. இரவு 11 மணியில் இருந்து அதிகாலை 3 மணி வரைக்கும் தூங்க வேண்டிய அவசியமான நேரமாகும். இந்த நேரத்தில் தான் உடலில் எதிர்ப்பு சக்தி நோயெதிர்ப்பு வேலையை முழு வீச்சில் மேற்கொள்கிறது.

இரவில் தூங்குவதற்கு பதிலாக பகலில் தூங்கி கணக்கை சரிசெய்து கொள்ள முடியாது. ஏனென்றால் உடலின் நச்சுத்தன்மையை அகற்றும் வேலையும், ஒவ்வொரு உள்ளுறுப்பையும் சீரமைக்கும் வேலையும், ஒவ்வொரு உயிரணுவும் வளர்ச்சியடையும் வேலையும் இரவுகளில்தான் முழுமையாக நடைபெறுகின்றன. எனவே இரவுகளில் தூங்குவது ஆரோக்கியத்தின் அடிப்படைத் தேவை.

ஒவ்வொரு நோயும் பரவுவதாக நாம் கேள்விப்படும் போது மட்டும்தான் நாம் ஆரோக்கியம் பற்றி சிந்திப்பவர்களாக இருக்கிறோம். இதற்கு மாறாக நாம் ஆரோக்கியமாக இருக்கும் போதே அதனை எப்படி நிலையானதாக மாற்றிக் கொள்வது என்று யோசித்தால் எந்த விதமான சீசன் பீதிகளுக்கும் நாம் ஆளாக வேண்டியதில்லை. மேற்கண்ட வழிமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் நோயெதிர்ப்பு சக்தியை உடல் பெறவும், பயத்திலிருந்து விடுபடும் வலிமையை மனம் பெறவும் உதவ முடியும்.

காய்ச்சலின் போது அதிகமான உடல் தொந்தரவுகள் இருந்தால் பயப்பட வேண்டியதில்லை. அருகிலுள்ள அக்குபங்சர், ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேத மருத்துவர்களை அணுகி ஆலோசனை பெறுங்கள்...



- அருண்குமார்
நெடுவை
9788045454

பதினோறு புள்ளி ஆறில் நிறுத்தவும்.
(ஆடு புள்ளி)

**அன்புக்கரசி பாலசுப்பிரமணியன்**
மன்னார்குடி



# பேய் வீட்டில் பட்டாம் பூச்சி விளைவு

இந்த உலகத்திலேயே உங்களுக்கு பிடிச்ச இடம் எதுன்னு கேட்டா, பல பேர் பல இடங்கள் சொல்வாங்க. ஆனால் அது எல்லாம் போய்ட்டு ஒரு வாரம் சுத்தி பாக்க மட்டும் தான். உண்மையிலேயே இந்த உலகத்துல நம்ம எல்லாருக்கும் பிடிச்ச இடம்ன்னா அது நம்ம வீடு தான்.

கந்தல் ஆனாலும் தாய் மடி போல் வருமா??

சொர்க்கம் சென்றாலும் சொந்த வீடு போல வருமா?? ..

அப்படி நம்ம எல்லார் வாழ்விலும் ஒன்றாக கலந்தது நாம் வசிக்கும் வீடு தான். அது ஏதோ செங்கல், சிமெண்டால் ஆன ஒரு உயிரற்ற கட்டடம் இல்லை. ஒவ்வொரு வீட்டுக்கும் உயிர் உண்டு.அது நம் உயிரோடு கலந்தது.

அதனாலதான் பல பேரு உலகத்துல எங்க சுத்திட்டு வந்தாலும் தன் சொந்த வீட்டுக்கு வரும் போது அவங்களுக்கு கிடைக்கிற நிம்மதி எங்கேயும் கிடைக்காது.

ஆனால் சில பேருக்கு அப்படி இல்லாம, அவங்க மன நிம்மதியை குலைக்ககூடிய விதத்தில் இருக்கும். எப்படினா வீட்டுக்குள்ளே வ இருந்தால் தலைவலி காய்ச்சல் சளின்னு எதாவது அவங்களுக்கு பண்ணிகிட்டே இருக்கும். நல்லா தாங்க இருந்தோம் இந்த வீட்டுக்கு வந்த பிறகு தான் இப்படி ஏதாவுது பண்ணிகிட்டே இருக்கு, ஏதும் காத்து கருப்பு வேலையா இருக்குமோ, யாராவது வீட்டுக்கு பில்லி சூனியம் வச்சுட்டாங்களான்னு தெரியலை என்று ஒரு சிலர் புலம்புவதை கேட்டு இருப்போம். அப்போ உண்மையிலேயே வீட்டுக்குள்ள பேய் தான் இருக்கா?? வீட்டுக்குள்ள paying guest தான் வருவார்கள், பேயே guest ஆ வருமா ன்னு தானே கேட்குறிங்க??

உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் ‘‘நோய்வாய்ப்பபட்ட கட்டிட நோய்க்குறி’’ (sick building syndrome) காரணமாக கட்டிடத்தில் இருப்பவர்கள் ( வீடு, மருத்துவமனை, பள்ளி அலுவலகம் என மனிதர்கள் தங்கும் அனைத்துக்கும் பொருந்தும் ) சந்திக்கும் நோய் பட்டியல்னு தலைவலி, கண் எரிச்சல் மற்றும் நீர் வழிதல், உலர்ந்த அடிக்கடி அரிக்க கூடிய தோல்கள், தலைசுற்றல் மயக்கம் ,அதிக இதய துடிப்பு, கருச்சிதைவு, முச்சுத் திணறல், மூக்கில் ரத்த கசிவு, நாள்பட்ட சோர்வு, பதட்டம், கால்கள் அல்லது கணுக்கால் வீக்கம், வறட்டு இருமல், நெஞ்சு வலி, சளி ஜலதோஷம், ஒவ்வாமை, நுரையீரல் பாதிப்பு, மூளை மற்றும் கிட்னி பாதிப்பு மற்றும் புற்றுநோய் போன்றவை வரலாம் என்று கூறுகிறது. இது 1960ம் ஆண்டுக்கு பின் கட்டடபட்ட கட்டிடங்கள் அனைத்துக்கும் பொருந்தும் சொல்லுறாங்க.அது எப்படின்னு பாக்கலாம்.

19ம் நூற்றாண்டின் மத்தியில் ,கட்டட காற்றோட்ட தரச்சான்று நிறுவன (building ventilation standards) விதிப்படி ஒரு தனி மனிதன் ஒரு நிமிடத்திற்கு 15 கன அடி வெளிப்புற காற்றை சுவாசிக்கும் வண்ணம் கட்டிடங்கள் இருக்க வேண்டும் என்பதாகும்.ஆனால் பின்னாளில் 5 கன அடி அளவாக திருத்தம் செய்யப்பட்டது.ஏனெனில்,

1973ல இஸ்ரேல் மற்றும் எகிப்து ,சிரியா நாடுகளுக்கு இடையே பாலஸ்தீனம் ஆக்கிரமிப்புக்காக நடந்த yom kippur போரில் சோவியத் யூனியன் மற்றும் ஈராக், சௌதி அரேபியா உள்ளிட்ட அரபு நாடுகள் எகிப்து சிரியா வை ஆதரித்தனர். இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு கொடுத்தது. 2 வாரங்கள் நடைபெற்ற அந்த போரின் முடிவில் இஸ்ரேல் வெற்றி பெற்றது. இதனால், (Organization of Arab Petroleum Exporting Countries) அரபு பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பு அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதி தடை விதித்தது (oil embargo). மேலும் எண்ணெய் உற்பத்தியையும் குறைத்து கொண்டது.

இதனால் எண்ணெய்யை வெகுவாக நம்பி இருந்த அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன. பல நாடுகளில் ஆற்றல் பற்றாக்குறையும் ஏற்பட்டது.

இதில் பெரிதும் பாதிக்கப்பட்டது அமெரிக்க நாடாகும். அமெரிக்காவில் அந்த வருடம் கிறிஸ்துமஸ் விளக்குகளை கூட எரிய விட வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் வார இறுதி நாட்களில் பெட்ரோல் விநியோகத்திற்கு தடை விதிக்கப்பட்டது. 1973-74 ஆண்டுகளில் இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, சுவிச்சர்லாந்து, நார்வே போன்ற நாடுகளில் ஞாயிறு அன்று பறத்தல், ஓட்டுதல் மற்றும் படகு சவாரி ஆகியவை தடை செய்யப்பட்டது. நெதர்லாந்து நாட்டில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அளவை விட அதிகமாக எரிபொருட்களை பயன்படுத்துவோருக்கு சிறை தண்டனை கூட விதிக்கப்பட்டது.

பிரிட்டன்ல இதனால் ஆட்சி மாற்றம் கூட ஏற்பட்டது.

நிறுத்துங்க ! நிறுத்துங்க ! இதை எல்லாம் இப்ப எதுக்கு சொல்றிங்க!! topic கை விட்டு எங்கேயோ போய்ட்டீங்க ன்னு கேக்குறீங்களா?? உங்க mind voice எனக்கு கேட்குது. சம்பந்தம் சம்பந்தம் இல்லமா சொல்லிக்கிட்டு போனாலும் சம்பந்தம் இருக்கு. எப்படினா எல்லாரும் கமல் நடிச்ச தசாவதாரம் படம் பாத்து இருப்பீங்க. அதுல பட்டாம்பூச்சி விளைவு (butterfly effect) கேள்வி பட்டு இருப்பீங்க.அதை மனசுல வச்சுக்கிட்டு இப்ப தொடர்ந்து படிங்க... எப்படி அந்த விளைவு வினையாற்றுது ன்னு பார்ப்போம்.

இந்த எண்ணெய் பிரச்சனையால பிரிட்டன் ல ஆட்சியே கலைஞ்சுதுன்னு சொன்னேன் இல்ல.

எப்படினா, குளிர் காலங்களில் ஒரே ஒரு அறையை மட்டும் வெப்பப்படுத்தி கொள்ளுங்கள் என்று அப்போதைய பிரிட்டன் பிரதமர் மக்களை கேட்டு கொண்டார்.சும்மா இருப்பாங்களா மக்கள், நாம எப்படி மின்சார பிரச்சினையால ஒரு ஆட்சியை தூக்கி எறிஞ்சோமோ அப்படித்தான் ஆச்சு.

அதுசரி ஒரு வீட்டுல ஹீட்டர் போடுறதுக்கும் பெட்ரோலியத்திற்கும் என்ன சம்பந்தம்?? ஹீட்டர் மின்சாரத்தில தானே இயங்கும்ன்னு நீங்க கேட்கலாம். மின்சாரம் தயாரிக்க பெட்ரோலியத்தின் பங்கு மிக முக்கியம். மின்சாரம் தயாரிக்க பெருமளவு உதவும் அனல் மின் நிலையங்களில் நீராவியை உருவாக்கப் பயன்படும் எரிபொருள் நிலக்கரி அல்லது பெட்ரோலியம். எனவே அப்போது பெட்ரோலியத்தை நம்பி மின்சாரம் தயாரித்த நாடுகள் அனைத்தும் அந்த நேரத்தில் மிகப்பெரிய மின்சார தட்டுப்பாட்டை சந்தித்தன. அதில் குறிப்பாக மிகவும் குளிரான தட்ப வெப்பநிலை கொண்ட அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் ஹீட்டர் இயக்க போதிய மின்சாரம் இல்லாமல் சிரமப்பட்டன.நம்மூர் ல அக்னி வெயிலில் குளிர் சாதனம் இல்லை என்றால் எப்படி கஷ்டமா அப்படி.

அதனால் அந்த நேரத்தில் தான் இந்த கட்டிட காற்றோட்ட விதிமுறைகளை தளர்த்தின.முன்பே சொன்ன மாதிரி 15 கனஅடி/நிமிடம் த்தில் இருந்து 5 கனஅடி/நிமிடமாக குறைத்தார்கள்.ஏன் என்றால் வெளிக்காற்று அதிகம் உள்ளே வந்தால் அதிகம் குளிரும். எனவே ஹீட்டர் அதிகம் தேவைப்படும். அதுவே வெளிக்காற்று குறைவாக வரும்படி வீடு கட்டினால் அதிகம் குளிராது. எனவே ஹீட்டர் பயன் பாடு குறையும். இந்த காரணத்தால் தான் இந்த கட்டிட விதிகள் மாற்றப்பட்டன. ஆனால் இது குளிர் அதிகம் உள்ள நாடுகளுக்கு சரி.

நம்மைப் போன்ற வெப்பம் அதிகம் உள்ள நாடுகளுக்கு ஒத்து வருமா?

ஆனால் இந்த விதிப்படியே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட பல கட்டிடங்கள் கிட்டத்தட்ட காற்று இறுக்கமாக உள்ள சூழலுக்கு மாறியது. நவீன மேற்கத்திய சிந்தனை சிறந்ததுன்னு நம்ப ஆரம்பித்த நம் நாடும் இந்த விதிமுறையை நம்பி நம் முன்னோர்கள் கட்டுமான வழியில் இருந்து சற்று விலகி நாமும் பல அடுக்குமாடி மற்றும் நகர கட்டடங்கள் வடிவமைக்க தொடங்கி விட்டோம் அவர்கள் போலவே. சென்னை போன்ற பெரு நகரங்களில் இந்த இறுக்கமான வீடுகள் பல நாம் எளிதாக பார்க்கலாம். புறாக்கூண்டு கள் போல நிமிடத்திற்கு 5 கன அடிக்கும் குறைவாகவே காற்றோட்டம் உள்ள வீடுகள் மக்கள் நெருக்கத்தால் பெருகி வருகின்றன.

இதனாலலேயே பலவித நோய்கள் நம்மை தாக்குகின்றன. காற்றும் வெளிச்சமும் உள்ள இருப்பிடமே ஆரோக்கியமான இருப்பிடம் என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள் அதற்கு ஏற்றார் போல வீடுகள் அமைத்து ஆரோக்கியமான வாழ்வை வாழ்ந்தனர்.

ஆனால் இன்றோ மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக  முழுதும் நமது சுய நலங்களுக்காக  வல்லரசு நாடுகளின் விதிகளை நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டும், இங்கே நாம் கடைபிடிக்க வேண்டிய சரியான விதிமுறைகளை பின் தள்ளியும் நமக்கு சற்றும் பொருந்தாத வீடுகள் அமைத்துக் கொண்டு நம் ஆரோக்கியத்தை குறைத்து கொள்கிறோம்.

அதனால இது எல்லாம் வீட்டுல உள்ள பேயோட விளைவு இல்லைங்க.பட்டாம் பூச்சி விளைவு.எங்கேயோ எப்பவோ 1973 ல நடந்த இஸ்ரேல் எகிப்து போர் 2020 ல நமக்கு மூச்சு திணற வைக்குது.

எனவே கட்டுமானம் செய்பவர்கள்  சிறிய இடத்தில் அதிக வீடுகள் என்ற இலக்கிற்காக வல்லரசு நாடுகளில் உருவாக்கப்பட்ட விதிகளை நம்ம சுய லாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டும், முறையாக வல்லுனர்களால் வகுக்கப்பட்ட கட்டுமான விதிமுறைகளை மீறியும் மக்களுக்கு ஆரோக்கியமற்ற இருப்பிடத்தை வழங்காமல் இங்கே நம் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு நம் முன்னோர் காட்டிய வழியில் ஆரோக்கியமான கட்டுமானங்கள் அமைக்க வேண்டும். அதற்கென உள்ள சரியான விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். இதை அரசாங்கம் கடுமையாக பின்பற்ற வேண்டும். வசிப்பவரின் ஆரோக்கியதிற்கு கேடு விளைவிக்கும் படி கட்டப்படும் கட்டடங்களுக்கு அனுமதி வழங்க கூடாது.

வீட்டின் அமைப்பை தவிர வீட்டின் உள் கட்டமைப்பும் (infrastructure) sick building syndromeக்கு காரணம் ஆகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) இந்த SICK BUILDING SYNDROME க்கான காரணங்கள் என்று ஒரு பெரிய பட்டியலை குறிப்பிட்டு உள்ளது.

உட்புற செயற்கை வெப்பமேற்றல் மற்றும் குளிர் ஊட்டல்  சாதனங்கள், பென்சீன், ஸ்டைரீன் போன்ற கரைப்பான்கள் கொண்டு உருவாக்க படும் பெயிண்ட் வகைகள், கூரை பொருட்கள், வண்ணப்பூச்சுகள், பாலிவினைல் குளோரைடு அதாவது PVC கொண்டு தயாரிக்கும் கதவு, ஜன்னல், குழாய்கள் மற்றும் தரைகள், கட்டுமான மர சீரமைப்பு மற்றும் பாதுகாத்தலுக்கு பயன்படுத்தும் கிரியோசோட் எனும் வேதி பொருள், Asbestos சீட், ஃபைபர் கிளாஸ், சிமெண்ட் மற்றும் கற்காரை வெளியேற்றும் கரியமிலவாயு,  கொசுவர்த்திகள் என 300க்கும் மேலான நவீன கட்டுமான வேதி

பொருட்களால் நமக்கு இன்றைய சுழலில் பல நோய்களுக்கு காரணம்ன்னு WHO ஆய்வுகள் கூறுகிறது.

ஆனால் இவை எல்லாம் இன்றைய நவீன காலத்தில் நம்மை விட்டு பிரிக்க முடியாத அம்சங்கள். எனினும், இவை யாவற்றையும் விட நம் ஆரோக்கியம் முக்கியம். எனவே புது வீடு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும் பட்சத்தில் மேற்கூறிய வேதிப்பொருட்கள் பயன்பாட்டை குறைத்து கொள்ளுங்கள். முழுவதும் இயற்கை சூழலுக்கும் பழமைக்கும் மாறுவது இனி கடினம் என்றாலும், கொஞ்சம் கொஞ்சமாக நவீனத் தேவைகளை அல்லது அதன் பயன் பாட்டை குறைத்துக் கொள்ளலாம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

--
படைப்பு


பாலாஜி பிரசாத்

மற்றும்


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

# குழந்தைகள் பதார்த்தங்களல்ல!


விஜயவர்மன்

நாகரீக வளர்ச்சி நம் தலைமுறையினுள் தலையிட தொடங்கிய பொழுதே, தற்சார்பு என்னும் கூற்று பொருளாதாரம், வாழ்வியில் ஆகியவற்றில் இருந்து விலகி, வெறும் வார்த்தை உச்சரிப்பாகி மட்டும் போனது. அன்று வரை, தனக்கு பிடித்த, பரீட்சயமான பணிகளை செய்து வந்த தமிழினம், தன் செயல்களை மற்றவர்களுடன் ஒப்பீட தொடங்கியது.

பள்ளியில் குழந்தைகளை சேர்ப்பதில் தொடங்கிய ஒப்பீடு, இடுகாடு வரை நீக்கமற நிறைந்துவிட்டது. தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பக்கத்து வீட்டுக்காரரே, அவரின் குழந்தையை அதிக பணம் செலவு செய்து, தனியார் பள்ளியில் படிக்க வைக்கும் பொழுது, அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் நான் எனது, குழந்தையை அரசு பள்ளியில் சேர்ப்பதா என பள்ளிக்கு செல்லும் முன்னரே ஒப்பீடு தொடங்குகிறது.
அவன் 100க்கு 100 எடுக்கும் பொழுது, உன்னால் ஏன் 90 மதிப்பெண்களை தாண்ட முடிவதில்லை? என ஒப்பீடு பள்ளிபடிப்பிலும் தொடர்கிறது.

இவ்வாறாக, நண்பர்களுக்குள் போட்டி, பொறாமையை உருவாக்கும் இந்த ஒப்பீடு, நாளடைவில் பின்னால் செல்பவனின் திசையை, முன்னால் செல்பவனின் விளைவுகள் மாற்றுகிறது!

என் பையன் இஞ்சினீயரிங்க் படிச்சுட்டு, ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்கிறான். பெரும்பாலும் பல இளைஞர்களின் கனவுகளை தொலைத்த, வேலையின்றி அலைய வைத்த பெருமை இந்த ஒற்றை வாக்கியத்திற்கு உண்டு.

கல்வி, வேலையில் தொடரும் ஒப்பீடுகள் இன்னும் முன்னேறி மேலும் பல விளைவுகளுக்கு வித்திடுகிறது.

23 வயசு ஆச்சு, என் மகளுக்கு கலியாணத்த முடிச்சிட்டேன், 25 வயசாகியும் ஏன் இழுக்குறீங்க என்று எங்கோ ஒரு திருமணத்தில் பார்த்த தூர உறவினர் ஒருவரின் வார்த்தைக்காக கனவுகளை அடைய நெருங்கிய தருணத்தில் தன் வாழ்க்கையை திசைமாற்றும் பெண்கள் இங்கு ஏராளம்.

கல்வி, வேலை, திருமணம் வரை துரத்திய இந்த ஒப்பீடுகள் போதாது என தாய்மையிலும் வந்து துரத்துகிறது. திருமணம் முடித்து, கடமைகளை நிறைவேற்றிய மகிழ்ச்சியை கூட

முழுவதுமாக சுவாசிக்காத பெற்றோர்களின் மீது தொடுக்கப்படும் மற்றுமொரு கேள்வி, வீட்ல என்ன விசேசம்?

மற்ற ஒப்பீடுகள் தனி மனிதன் சார்ந்தவை, தாய்மை என்பது புதிதாக இணைந்த இரு வேறு உயிர்களின் உன்னத படைப்பை சார்ந்தது. காதல் திருமணங்களில் பெரும்பாலும் கணவன் - மனைவியாகிறவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருப்பார்கள் எனினும், புது இடம், புது உறவுகள், புது கடமைகள் என கற்றுக் கொள்ள வேண்டிய விசயங்கள் பல காத்துக் கொண்டுதானிருக்கின்றன. மாறாக, நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் தான் மணம் செய்து கொண்டவரை புரிந்து கொண்ட பிறகு தான் அடுத்த கற்றல்.

இவையனைத்தும், நிறைவு செய்து இரு மணங்கள் இணைந்த பின்பு தான் தாய்மை என்னும் உன்னத நிலையை அடைய இயலும். மேலும் ஒரு சிலருக்கு, அவரவரின் உடல்நிலைகளை பொறுத்து கூடுதல் நேரமெடுக்கலாம், அதுவரை உங்கள் கேள்விகளையும், கேலிகளையும் புறந்தள்ளுங்கள். ஏனெனில், அறுத்து, வேக வைத்து, சமைத்து எடுப்பதற்கு குழந்தைகள் ஒன்றும் பதார்த்தங்களல்ல, அவர்கள் இறைவனின் கொடை!

**- விஜயவர்மன்**
மன்னார்குடி

## பிரியா
மன்னை

ஓவியம்



# கீழடி சொல்லும் தமிழ் மொழியின் சிறப்பு

கல் தோன்றி, மண் தோன்றாக்
காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தக்குடி!
-ஐயனாரிதனார் (புறப்பொருள் வெண்பா மாலை)

''மலையும் காடுகளும் தோன்றி, மருதநிலம் தோன்றாக் காலத்தில் கழனி திருத்தி விவசாயம் செய்வதற்கு முன்னர் காட்டில் விலங்குகளுக்கு முன் வில்லோடும், வாளோடும் தோன்றி போரிட்டு வாழ்ந்த ஆதிகுடிமக்கள் தமிழ் மக்களே!'' என பொருள்படும் இப்பாடலை பொய்யென்று உரைத்தோரின் காதுகளில் ஓங்கி அறைந்திருக்கிறது கீழடி அகழ்வாராய்ச்சி!

பழம்பெரும் இலக்கண நூலாம் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பனம்பாரனார் தமிழ்நாட்டின் எல்லையை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்.

தொல்காப்பியத்திற்கு முன்னரே லெமூரியா கண்டமென்றும் குமரிக் கண்டமென்றும் தேவநேயப் பாவாணர் முதலாக பலா் குறிப்பிட்ட இந்தியப் பெருங்கடலின் பெரும்பகுதியும், பசிபிக் பெருங்கடலின் சில பகுதிகளும், தமிழ் கூறும் நல்லுலகில் அடங்கும். தமிழின் வரலாற்றை தமிழரின் வரலாற்றை நாம் கூற முற்படாமல் போக, ஆரியர் வகுத்த பாடத்தின் மொழி பெயா்ப்பான மொகன்சதாரோ, ஹரப்பா மற்றும் சிந்து சமவெளி நாகரீகங்ளே பாடத்திட்டத்தில் சோ்க்கப்பட்டது.

மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய் பாவேந்தருங் குறைந்து பழைய நூலுரைகளும் மறைந்து, படிப்பாருமின்றி கேட்பாருமின்றி தமிழ்க் கல்வி மங்கி மெல்ல அருகி வரும் இக்காலக் கட்டத்தில்,

மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது!
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை

என பாரதிதாசன் வருத்திய காலகட்டத்திற்கு முன்னதாக 1901ல் நன்மதுரையிலுள்ள சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் பாண்டித்துரை தேவரால் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படுகிறது. இன்னும் எத்தனை சங்கங்கள் வந்தாலும் இப்போது தமிழ் படும் பாட்டை போக்க முடியுமா என தெரியவில்லை. சங்க இலக்கிய நூல்களாக நாம் கருதும் காப்பியங்களும், மேல்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களும் மூன்றாம் தமிழ்ச் சங்கக் காலம் சார்ந்தவை.

இச்சங்க காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து, கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் 168வது புறநானூற்றுப் பாடலில் தமிழகம் என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழகம் கேரளா, இலங்கை மற்றும் கா்நாடகா, ஆந்திர பிரதேசங்களின் சில பகுதிகளும் அடக்கம்.

தமிழ் காப்பியங்களில் மிகப் பழமையானதானதாக போற்றப்படும் தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டது. தொல்காப்பியர், கீரந்தையார் உள்ளிட்ட பெரும்புலவா்கள் அகத்தியத்தை ஆதாரமாகக் கொண்டு பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை போன்ற நூல்களை உருவாக்கினர். பாண்டிய மன்னன் கடுங்கோன் இடைச்சங்கத்தை கபாடபுரத்தில் தோற்றுவித்தான்.

பல இலக்கிய இலக்கண நூல்கள் தோற்றுவிக்கப்பட்ட இடைச்சங்கம் செயல்பட்டது. கி.மு. 3000 முதல் 1500 வரை உள்ள காலமாகும். வியாசபாரதத்திலும், வால்மீகி ராமாயணத்திலும் இடைச்சங்க காலத்திற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

முதல் தமிழ்சங்கமான தலைச்சங்கத்தின் நிறுவனர் அகத்திய முனிவராவார். சங்கத்தின் தலைவர் திரிபுரம் எரித்த விரிசடையுடையோன். இவர் தான் நெற்றிக்கண்ணைத் திறந்து திரிபுரத்தை எரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமான்.

குமரிக்கண்டத்திலிருந்து பின் கடலுக்கடியில் மூழ்கிப் போன பாண்டிய மன்னர்களின் முதல் தலைநகரமான தென்மதுரை மாநகரமே தலைச்சங்கம் உருவான இடம். 4449 புலவர்களைக் கொண்டு 4400 ஆண்டுகள் செயல்பட்ட இச்சங்கத்தில் தான் பரிபாடல், முகநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் இயற்றப்பட்டன. காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 அரசர்கள் ஆண்ட நிலப்பகுதி கி.மு. 2387 ஆம் ஆண்டில் கடல்கோளால் அழிந்து போனது. நக்கீரரின் கணிப்புப்படி முதல் தமிழ் சங்கத்தின் தொடக்கம் கி.மு. 9000ல் நடந்திருக்கிறது.

பெர்சியன் வளைகுடாவிற்கு அருகே டைகிரிஸ், யூப்ரடிஸ் நதிக்கரைகளில் தோன்றி வளர்ந்த உலகின் மிகப் பழமையான 10 நாகரிகங்களில் முதன்மையானதாக கருதப்படும் மெசபடோமியன் நாகரிகம் கி.மு. 3300 முதல் தோன்றி வளர்ந்திருக்கிறது. எகிப்து நாகரிகம் கி.மு. 3000 முதல் கி.பி. 550 வரையிலும், சீன நாகரிகம் கி.மு. 2000 முதல் கி.பி. 500 வரையிலும் தோன்றி வளர்ந்துள்ளது. மெசபடோமியோ, எகிப்து ரோமாபுரி, சீனம், மாயன், சிந்து சமவெளி, ஜியாகு, ஆஸ்திரேலியா என உலகில் பழமையான உலக நாகரிகங்கள் வரிசைப்படுத்தப்படும் போது தமிழர் நாகரிகம் எங்கே போனது?

கொரியன், ஹீப்ரு, எகிப்து, கிரேக்கம், சமஸ்கிருதம் சீனமொழி, பார்சி என தோன்றிய காலத்தைப் பொருத்து வரிசைப்படுத்தப்படும் பொழுது தமிழ் தான் ஆதிமொழி என கூறுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

மற்ற மொழிகள் தோன்றிய காலத்திலேயே தமிழில் இலக்கண இலக்கியங்கள் இருந்தது. மூத்த குடியின் மிச்சங்களாகவும், எச்சங்களாகவும் வாழும் தமிழரும் தன் முதன்மையை, பழமையை உணரவில்லை என்பதே வேதனையின் உச்சம்.

2013- 14ஆம் ஆண்டில் மத்திய அரசின் தொல்லியல் துறை சார்பாக வைகைப்படுகையின் தேனி, மதுரை, சிவகங்கை திண்டுக்கல், ராமநாதபுரம் மாவட்டங்களில் அகழ்வாராய்ச்சி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 293 இடங்களில் ஒரு பகுதிதான் சிவகங்கை மாவட்ட எல்லையான கீழடி.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் சார்பாக எடுக்கப்பட்ட படிமங்கள் அமெரிக்க தொல்லியல் துறையின் கதிரியக்க கார்பன் வயது கணிப்பின்படி இந்திய அரசு அறிவித்த கி.பி.1000 ஆண்டுகளை விட இன்னும் 580 ஆண்டுகள் பழமையானதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. அதாவது கி.மு 10ம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலமாகும்.

இது மூன்றாம் தமிழ் சங்க காலத்திற்கு முற்பட்டது.

பழமையானது என்பதையும் தாண்டி இப்போது நாம் பயன்படுத்தும் அறிவியல் ரீதியான பயன்பாட்டு நாகரிகம் அக்காலத்திலேயே தமிழர்களின் வாழ்வியலாக இருந்திருக்கிறது. அக்காலத்து மனிதா்களின் கட்டுமானம், கருவிகள், வாழ்வியல் முறை என அனைத்தும் ஆச்சரியங்கள். நாம் படிக்கிற வரலாற்றை திருத்தி எழுத வேண்டிய கட்டாயத்திற்கு கொண்டு வந்திருக்கிறது கீழடி.

கீழடி தமிழனின் புது அடையாளங்களில் ஒன்றாக மாறிப் போனதில் ஆச்சரியங்கள் ஒன்றும் இல்லை. உலகின் மிகப் பழமையான ஏதென்ஸ் நகரை ஒப்பிடும் வகையில் தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என அழைக்கப்படுகிறது கீழடி. மதுரை, கீழடியைப் பற்றி வெளிவந்த ஆக முதல் ஆராய்ச்சி நூலில் தமிழக அரசின் தொல்லியல் துறை உதவி இயக்குனர் டாக்டர் ஆர். சிவானந்தம் கீழடி என்பது 2600 ஆண்டுகள் பழமையான கலாச்சாரம் என்பதை ஆதாரத்துடன் விளக்குகிறார்.

செங்கல் சுவர், மாடி வீடு, தமிழின் மூத்த வடிவமான பிராமி எழுத்துக்கள் - வெளிப்படுத்தும் இலக்கிய ஆவணங்கள், எழுது பொருட்கள், துணி நெய்ய பயன்படும் உபகரணங்கள், தொங்கட்டான் தொடங்கி ஊசி வரை உள்ள கலை வேலைப்பாடுகள், மனித உருவங்கள், கொம்புகள் என கீழடியில் கிடைக்கப்பெற்ற அத்தனையும் தமிழனின் நாகரீக உச்சத்தையும் பழமையையும் உணர்த்துவன. நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியும் எனக்கு மறுபிறவி உண்டென்றால் தமிழனாய் பிறக்க வேண்டும் என்கிறார்.

முன் தோன்றிய மூத்தக்குடி என்னும் ஆதாரத்தை கீழடி நமக்கு தந்துவிட்டது. மறைக்கப்பட்ட வரலாற்றைப் பொதுமைப்படுத்துவோம். உலகிற்கு நாகரிகத்தை கற்றுத் தந்தவர்கள் என்ற பெருமையோடு தமிழ் படிப்போம். தமிழனாய் தரணியை வழிநடத்த தயாராவோம்.

**ச. அன்பரசு,**
முதுகலை ஆசிரியர், மன்னார்குடி.
தொடர்பு இலக்கங்கள் : 978709302 / 7010217979
Email: anbuhereforu@gmail.com

# யாசகன்...

மின்சாரம் துண்டிக்கப்பட்ட
அந்த
இரவுப் பொழுதில்,

தேர்வுக்கு
படிக்க முடியவில்லை என
கல்லூரி மாணவியின் குமுறல்,

சாப்பாடு
செய்ய முடியவில்லையென
இல்லத்தரசியின் புலம்பல்,

தொலைக்காட்சிப் பெட்டியில்
செய்திகள் பார்க்க
முடியவில்லை
என்ற
பெரியவரின் பெருமூச்சு,

கிரிக்கெட்
பார்க்க முடியவில்லை
என இளைஞர்களின் கூச்சல்,

இருள் சூழ்ந்ததால் உறங்காமல்
விழித்துக் கொண்ட
குழந்தையின் அழுகைச் சத்தம்,

இவர்களின் சத்தம் கேட்டபடி
தெருவை கடந்து
கொண்டிருக்கிறான்...
பிறந்ததிலிருந்து ஒளியையே
பார்க்காத
பார்வையற்ற யாசகன்!

**மு.முபாரக்**
முதுநிலை எழுத்தர்
எண் 273 வாளாடி கூட்டுறவு
வங்கி
வாளாடி, லால்குடி வட்டம்,
திருச்சி மாவட்டம், 8072600090

# மார்கழி கோலங்கள்

பனியும் குளிரும்
வாசலில் படர்ந்திருக்க,
ஆதவன் வரும் முன்னே
தலை குளித்து,
முகம் நிறைய
மஞ்சள் பூசி,
நெற்றியில் குங்குமம் இட்டு
எதிர் வீட்டு வாசலில்
கோலமிடுகிறாய் நீ,
கூடவே என் இதயத்திலும்

தினம் தினம்
தீவிரமாய் பயிற்சி செய்து
தெருவில் போட்ட கோலம் தவிர்த்து
புதுக்கோலம் போடும் உன் ரசனை

அழுத்தமான புள்ளிகள்
சீரான இடைவெளி என
பாங்காய் நீ வரையும் அழகு

நேர்த்தியான கோடுகள் ....
அசாத்திய வளைவுகளென -
அசத்தலாய் வரைந்திடும் உன்
லாவகம்!
தாமரைக் கோலம்,
பாகல் இலை  கோலம்,
குத்து விளக்கு கோலம்,
கிளி கோலம்,
ரோஜாகோலம்,
தொட்டில் கோலம்,
என தினமும்

ஒவ்வொரு விதமாய்
அத்தனை அத்தனை ஆசையாய்
எத்தனை எத்தனை கோலங்கள்

பல வண்ண நிறங்கள் கொண்டு
கோலமதற்கு  உயிர் கொடுத்து
பூசணி பூ நடுவில்
வைத்து..
நீ -
நிமிர்ந்தெழும் போது...
மனசு சொல்கிறது...
கோலம் அழகுதான்...
அது நீ போட்டதால்...!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# என் தலைவன் (தம்பி)

எனக்கு அடுத்து
என் தாய் வயிற்றில்
துளிர்த்த தளிர் அவன்

குறும்புத்தனம் செய்யும்
குட்டிப் பையன் அவன்

அட்டகாசம் செய்யும்
அடாவடிக்காரன் அவன்

என் கை பிடித்து
என் மார்பில் சாய்ந்து
என் நெஞ்சில் எட்டி உதைத்த
என்னவன் அவன்

என் தாய் முகத்தை பார்த்ததை விட
என் முகத்தை பார்த்து
வளர்ந்த வைரம் அவன்

தவம் இருந்து
பெற்றெடுத்த
தங்கமகன் அவன்

வீட்டின் செல்லப்பிள்ளை அவன்
வீடு முழுவதும் கிறுக்கி வைக்கும்
ஓவியன் அவன்

கடைசியாய் பிறந்த
கடைக்குட்டி அவன்

தான் செய்யும் தவறை மறைத்து
செய்யாத தவறுக்கு
என்னை தந்தையிடம்
திட்டு வாங்க வைக்கும்
திறமையான
திறமைசாலி அவன்

அனைவரிடமும் அன்பாய் பேசி
ஆனந்தமாய் பழகி
அனைவரும் அரவணைக்கும்
அன்பு உள்ளம் கொண்ட
கொடைவள்ளல் அவன்

அப்பாவின் கோவத்திற்கும்
அம்மாவின் அன்பிற்கும்
அக்காவின் சொல்லுக்கும்
கட்டுபட்டவன் அவன்

ஊர் வம்பு செய்துவிட்டு பயம்
என்றால் என்னவென்று தெரியாமல்
வீட்டிற்கு வரும் பயமறியாத
காளை அவன்

தம்பி என்ற உறவை மறந்து
நட்பாய் பழகும்
நம்பிக்கை கொண்ட
நல்ல நண்பன் அவன்

எந்த இடத்திலும் என்னை விட்டு
கொடுக்காமல் என்னை தட்டி
கொடுத்து பேசும்
தைரியமானவன் அவன்

ஆயிரம் கவலைகள் தன்னுள்
இருந்தாலும் தன் கவலையை மறந்து
மற்றவர்களை சிரிக்க வைக்கும் சிரிப்பு
முகம் கொண்ட

சிற்பம் அவன்

பல எதிரிகள் எனக்கு இருந்தாலும்
என் முன் நின்று கம்பீரமாய் எனக்காய்
எதிர்க்கும் மாவீரன் அவன்

தன்னம்பிக்கையும் தலைக்கணமும் தைரியமும் கொண்ட என் தலைவன் அவன்

பெண்களுக்கு எல்லாம்
அதிகம் பிடித்த
பேரழகன் அவன்

எனக்கு ஒரு துன்பம் என்றால்
தனக்கு என்று எண்ணி என்னை
அரவணைக்கும் என் அன்னை அவன்

அப்பாவிற்கு அடங்காதவன்
அம்மாவிற்கு அன்பானவன்
அக்காவின் முதல் குழந்தை அவன்
என் உயிருக்கு உருவம் அவன்

தம்பி உடையான் படைக்கு அஞ்சான்
என்ற பழமொழிக்கு
பொருத்தமானவன் இவன்....

தம்பிகளுக்கு சமர்ப்பணம்

அன்புடன்



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

# விடியல் எப்போது?

முன் தூங்கி பின் எழுந்து
பட்டாம்பூச்சியாய் சுற்றித் திரிந்து
பட்டாடை உடுத்தி பவனி வந்த காலம் போய்
பின் தூங்கி முன் எழுந்து
அடுக்களை புகுந்து அனுதினமும் சமைத்து
அலுவலகம் சென்று அனைத்து வேலைகள் முடித்து
பேருந்தில் ஏறி நின்று சற்று மூச்சு விட முற்படும்போது
பேராபத்தாய் அவளை துரத்தும் பாலியல் சீண்டல்கள்
நெரிசலால் இடிப்பதாய் நித்தமும் நினைத்துக் கொண்டு
கரிசனமாய்க் கண்ணில் வழியும்
கண்ணீரை துடைத்துக்கொண்டு
வீடு தேடி வரும் பெண்ணினமே
விடியல் நம்மை தேடி வரும் காலம் எப்போது?



ஜா. இந்திரா, எம்.ஏ; பி.எட்,
இடைநிலை ஆசிரியை,
மன்னார்குடி

# அனைத்தும் அவனே

கடவுளை தரிசிக்க
கோயிலுக்குச் செல்ல
வேண்டும்
எனும் நினைப்பை என்னுள்
விதைத்தவன் அவன்.

எந்த நிறத்தில்
எந்த உடையில்
யாருடன் செல்வதென
தீர்மானிப்பவன் அவன்.

நடந்து போவதா?
பேருந்தில் செல்வதா?
எப்படிப் போவது?
எப்போது போவது?
அனைத்தும்
அவன் கட்டளையின் கீழ்.

அர்ச்சனை முதல்
ஆரத்தி சூடம் வரை
அவன் சுட்டிய நேரத்தில்.
திவ்ய தரிசனமும்
விண்ணப்ப வேண்டுதலும்
நேர்த்தி கடனும்
உண்டியல் காணிக்கையும்
அவன் கணித்தபடியே.

நடை வாசலில்
வாய்க்கும் கைக்கும்
கையேந்தி நிற்கும்
வயோதிகர்களுக்கும்
யாசகர்களுக்கும்
கொடை வழங்குதல் கூட
அவன் தீர்ப்பின்படியே.

அவனின்றி
ஓரணுவும் அசையாதென
நம்பிக்கையோடு
பாட வைத்தவனும் அவன்.

என் கோரிக்கையை
நிறைவேற்றாமல்
என்னிடம்
பேச்சு வாங்கிக் கொள்ள
எனக்கு ஆணை
பிறப்பித்ததும்கூட
அவனே...அவனே...அவனே...

ஆக்கம்



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

# நேரக்கோணம்


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

நம்ம எல்லாருக்குமே நம்ம தினசரி வாழ்க்கையில் கடிகாரம் பார்க்கிற பழக்கம் இருக்கு. ஏன்னா நேரம் நமக்கு ரொம்ப முக்கியம் .நேரம் பார்க்காம நாம ஒரு நாள் கூட ஓட்ட முடியாது. நாம எதை வெச்சு நேரத்தை பார்ப்போம்? அந்த கடிகாரத்தில் இருக்கும் சின்ன முள் பெரிய முள், இந்த இரண்டை வச்சு தான் பார்ப்போம்...

எல்லாருக்குமே நேரம் எப்படி பார்க்கிறதுன்னு தெரியும். ஆனா இந்த கட்டுரை அதைப்பற்றி கிடையாது. இது நேரத்தைப் பற்றிய கட்டுரை அல்ல. நேரத்தில் உள்ள நேரக்கோணத்தை எப்படி கணக்கிடுவது என்பது பற்றிய கட்டுரை.

அது என்ன நேரக் கோணம்.கடிகாரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தின் போது சின்ன முள்ளிற்கும், பெரிய முள்ளிற்கும் இடைப்பட்ட கோணம் தாம் ‘‘நேரக் கோணம்’’.

அது சரி .அதான் எனக்கு தெரியுமே. 12 மணி ஆனா $0^0$.
6 மணி ஆனா $180^0$.
3 மணி ஆனா $90^0$ என பார்க்கும் போதே தெரியுமே. இதுல என்ன பெருசா இருக்குன்னு நீங்க கேட்கலாம்.

நீங்க சொல்வது போல நேரடியாக 12 மணி, 6 மணி, 3 மணி இவற்றிக்கெல்லாம் நம் பார்வையாயலேயே இடைப்பட்ட கோணம் என்னவென்று சொல்லி விட முடியும்.

ஆனால்,
அது போல ஒவ்வொரு நேரத்திற்கும் சொல்ல முடியுமா??

உதாரணமாக 12.30 மணி, 3:20 மணி, 6:45 மணி இவற்றிற்கெல்லாம் இடைப்பட்ட கோணம் என்னவென்று நம் பார்வை யாலேயே சொல்லி விட முடியுமா??

முடியாதுன்னா தொடர்ந்து இந்த கட்டுரையை படிங்க.. எப்படி அதற்குள் ஒரு கணித அறிவு உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இரண்டு முற்களுக்கும் இடைப்பட்ட கோணத்தை கணக்கிடுவதற்கு முதலில் அந்த முட்களின் நிமிடக் கோணத்தை கணக்கிட வேண்டும். அதாவது அந்த முள் ஒரு நிமிடம் நகர எத்தனை degree தேவைப்படும் என்பதை கண்டு அறிய வேண்டும்.

அதை கண்டு அறிய வேண்டும் என்றால் அந்த முள் $360^0$ அதாவது ஒரு முழு சுற்று வருவதற்கு ஆகும் நேரத்தை முதலில் கணக்கிட வேண்டும். பின்பு அதை வைத்து ஒரு நிமிடத்திற்கு என்ன கோணம் வரும் என்பதை கண்டறியலாம்.




முதலில் பெரிய முள்ளை எடுத்துக் கொள்வோம்.

பெரிய முள் ஒரு முழு சுற்று அதாவது 360K வர 1 மணி நேரம் எடுத்து கொள்கிறது.
அப்ப 60 நிமிடங்களுக்கு =3 60K

எனில் 1 நிமிடத்திற்கு = 360/60
= 6K

எனவே பெரிய முள்ளின் நிமிடக்கோணம் = $6^0$

அடுத்து சிறிய முள்ளை எடுத்துக் கொள்வோம்.
சிறிய முள் $360^0$ அதாவது ஒரு முழு சுற்று வர 12 மணி நேரம் ஆகிறது.

அதாவது 720 நிமிடங்கள்.


720 நிமிடங்களுக்கு = $360^0$
அப்ப ஒரு நிமிடத்திற்கு = 360/720
= $1/2^0$
எனவே சின்ன முள்ளின் நிமிடக் கோணம் =1/2(அரை)$^0$

இப்ப இதை வச்சு எப்படி நேரக்கோணம் கண்டு அறிவது என்று பார்ப்போம்.

இப்ப மணி 12.30 ஆகுதுன்னு வச்சுக்குவோம்.

பெரிய முள்ளு 6ல நேரா இருக்கும். ஆனா சின்ன முள்ளு 12க்கும் 1க்கும் இடையில் இருக்கும். இப்ப எப்படி கோணத்தை கணக்கிடுவது.

முதலில் பெரிய முள் 12ல் இருந்து 12.30 செல்ல அதாவது 30 நிமிடம் நகர்ந்த கோணத்தை கண்டுபிடிக்க வேண்டும்.




நாம் ஏற்கனவே கண்டுபிடித்த பெரிய முள்ளின் நிமிடக் கோணம் $6^0$ யை 30 நிமிடங்களுக்கு கணக்கிடும் போது,

$=30x6 = 180^0$ வருகிறது.

இதை சிறிய முள் 12ல் இருந்து 12.30 மணிக்கு நகர்ந்த கோணத்தோடு கழிக்க வேண்டும்.

சிறிய முள்ளின் நிமிடக் கோணம் $1/2^0$
எனில் 30 நிமிடங்களுக்கு $= 30x1/2$
$=15^0$

நாம் ஏற்கனவே கண்டு பிடித்த பெரிய முள் நகர்ந்த 30 நிமிட கோணத்தை ,சிறிய முள் நகர்ந்த 30 நிமிட கோணத்தோடு கழிக்கும் போது நமக்கு 12:30 மணிக்கான கோணம் கிடைக்கும்.

$180^0 - 15^0 = 165^0$

இது தான் 12:30 மணிக்கான கோணம்.

இதுவே இன்னும் கொஞ்சம் கடினமா பார்ப்போம்.

மணி இப்ப 3:36.

இப்ப எப்படி கண்டுபிடிப்பது??

பெரிய முள் 7ஐ தாண்டி ஒரு நிமிடம் நிற்கும்.சிறிய முள் 3க்கும் 4க்கும் இடையே இருக்கும்.

ஆனால் இதை கணக்கிடும் முறை சற்று வேறு..

முதலில் பெரிய முள் 3ல் இருந்து 7ஐ தாண்டி ஒரு நிமிடம் வரை உள்ள நிமிடங்களை பார்க்க வேண்டும்.

3 to 4 = 5 நிமிடங்கள
4 to 5 = 5 நிமிடங்கள்
5 to 6 = 5 நிமிடங்கள்
6 to 7 = 5 நிமிடங்கள்
அப்பரம் 7க்கு பிறகு =1 நிமிடம்.

மொத்தம் = 21 நிமிடங்கள்

எனில் 21X6 = $126^0$ பெரிய முள்ளின் கோணம்.

அடுத்து 3ல் இருந்து 3:36 வர சின்ன முள்ளின் கோணம் என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

$36x1/2^0 = 18^0$
இப்ப வழக்கம் போல பெரிய முள்ளின் கோணத்தில் இருந்து சிறிய முள்ளின் கோணத்தை கழிக்க,

$126 - 18 = 108^0$ என்பது தான் விடை. எனவே கடிகாரத்தில் 3:36 மணி எனில் அது $108^0$ கோணத்தில் இருக்கும்.

இதே போல நாம் ஒவ்வொரு மணிக்கும் கணக்கிட முடியும்.

சரி இதனால் என்ன பயன் என்று கேட்கலாம்.. வங்கி தேர்வு, பொறியியல் வேலைத் தேர்வுகளில் aptitude test என்று ஒன்று உண்டு. அதில் நிச்சயம் இது போன்ற ஒரு கேள்வி வரும். இது அதற்கான எளிய விளக்கத்தை கூறும் பதிவு. நாம் அன்றாடம் பார்க்கும் ஒரு விஷயத்தில் உள்ள சிந்தனைத் திறனை தெரிந்து கொள்வதற்கான முயற்சி.


- செந்தில் பக்கிரிசாமி
மன்னார்குடி

# நேசக் களவானி

மனச மருகவச்சி
மழைக்காத்தா போறவளே
மலைப்பாகி நிக்குறன்டி
மணிக்கணக்கா வீதியில
பச்சை தாவணியே
பச்சைப்புள்ள தோரணையே
பருத்தி சிரிப்பாலே
பத்தவச்சி இரசிக்குறயே
மடந்தை செழிப்பாலே
மடக்கி இழுக்கிறநீ
மாராப்புத் திமிராலே
மன்மதத்த கூட்டுறநீ
சிலந்தி விழியாலே
சிறைபின்னி வதைக்கிறநீ
சிணுங்கும் பேச்சாலே
சீனிமூட்டை ஊட்டுறநீ
தட்டானாய் இமையடிக்க
தங்கக்குச்சி இடைசொடுக்க
தலையெல்லாம் கிறுக்கேறி
தடம்புரண்டு சாயுறன்டி
கோவில் சிலையழகே
குத்தவச்ச மோகினியே
குளத்தங்கரை வாடி
கூடிக்கொஞ்சி போக
செக்கச் சிவந்தவளே
செம்பவள மல்லிகையே
செவ்வாம்பல் மெல்லிதழில்
செதுக்கிவையி என்னுசுர
சொக்கப் பனங்காடே
சொப்பனத்துத் தேவதையே
சொந்தமென நீவந்தா
சொர்க்கம்வரும் நாம்வாழ
நேசக் களவானி
நெஞ்சம்வச்ச மருதாணி
நெற்றித் திலகமிட
நெருங்கிவாடி பக்கத்தில
தாம்பூலம் காத்திருக்குத்
தக்கநாளும் வாய்ச்சிருக்குத்
தாமதம் நீக்கிவிடு
தாலிகட்ட வாரன்புள்ள!



பொன். தெய்வா
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.




ஓவியம்
ராஜேஷ்

ஓவியம்

பிரியா
மன்னை





# தஞ்சாவூர் பெரியகோவில் நீர்த்தெளிவிழா தமிழ்லதான் நடக்கனும்



திருச்சி பார்த்தி

கட்டிடகலை தமிழகத்தில் இருந்ததிற்கு சங்ககாலம் முதலே குறிப்புகள் உண்டு. இடைக்காலத்தில் கோவிலும் இறையும் வடமொழி ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்படுகிறது. ஆகவே கோவிற் கட்டடப்பகுதிகளும் கட்டிடக் கலைச் சொற்களும், வழிபாட்டுக் கலைச்சொற்களும் வடமொழியாயின. கோயில் ஆலயமாயிற்று. இலக்கியத்திலோ, கல்வெட்டிலோ காணப்படாத ‘‘கர்ப்பகிருகம்’’ என்ற சொல், தமிழகமெங்கும் வழக்கில் இருந்த உண்ணாழிகை, அகநாழிகை என்ற அழகிய சொற்களை வழக்கிலிருந்தே அகற்றிவிட்டது. இறைவனை சுற்றிவரும் திருச்சுற்று என்பது பிரகாரமாகவும், திருச்சுற்று கோவில்கள் பரிவாராலயங்களாகவும் மாறிவிட்டது. காலவெள்ளத்தால் அழிவுற்ற கோவிலை திருத்திகட்டிய ‘‘அழிவுதிருத்தல்’’ சீரனோத்தாரணமாயிற்று. நீர்தெளித்து கோவிலை தூய்மைப்படுத்திய ‘‘நீர்த்தெளிவிழா’’ கும்பாபிஷேகமாயிற்று. இவற்றைப்பற்றி கூறும் தமிழ்

நூல்கள் அழிந்தோ, அழிக்கப்பட்டோவிட்டது(?), இதற்கு மாற்றாய் காசிபசில்ப சாத்திரம், மயமதம் வடமொழி நூல்கள் இன்று நம் கட்டடக் கலையின் நூல்கள் ஆகிவிட்டது.

பூசை, விழா, கொட்டு, ஆட்டு, பாட்டு என அனைத்திலும் வடமொழிவாடை, தமிழ் மணத்தை அமுக்கியேவிட்டது. இக்கட்டடங்களை கட்டிய நம் தலைமைக் கலைஞர்கள் அன்று ''பெருந்தச்சன்'' என அழைக்கப்பட்டது பல கல்வெட்டில் அறியலாம். (கோவாத பெருந்தச்சன், ராசராச பெருந்தச்சன், ஐயப்பன்சேரி பல்லவ பெருந்தச்சன்) இன்றும் மலையாள தேசத்தில் இவர்களை தச்சன் என்றே கூறுகின்றனர். ஆனால் அப்பெருமை இன்று போய் ஸ்தபதி என்றால் தான் பெருமையாகிவிட்டது.

அறிந்தோ, அறியாமலோ நாம் நீண்ட நாட்களாய் வடமொழியை பயன்படுத்திவிட்டோம். நம் வழக்கில் வந்த ஓர் மொழியை வெறுக்க கூடாது. ஆனால் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் இல்லை, அவற்றின் நலதீங்குககளை நாம்தான் சீர்தூக்கி பார்க்க வேண்டும். வடமொழி எழுத்துகள் பெருகி நம்மொழியும் மணிப்பிரவளம் என்ற பொல்லா நடைக்கு ஆட்படக்கூடாது.

ஆகவே தஞ்சாவூர் பெரியகோவில் நீர்த்தெளிவிழா தமிழ்லதான் நடக்கனும்னு சொல்லலங்க, நடந்தா நல்லலாயிருக்கும்னுதான் சொல்றேன்.

--

திருச்சி பார்த்தி

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine